# கணிணியியலில் நேர்பெயர்ப்புச் சொற்களும் ஒலிபெயர்ப்புச் சொற்களும்

இலக்குவனார் திருவள்ளுவன்,thiru2050@gmail.com
7/1, மாவு ஆலை முதல் தெரு, மயிலாப்பூர், சென்னை 600 004

அறிவியல் துறைகளைப் புரிய வைப்பதற்கும் அறிந்து கொள்வதற்கும் கையாளப்படும் கலைச்சொற்கள் தன்-விளக்கமாயும் எளிமையாயும் அமைய வேண்டும். அவ்வாறு இல்லாச் சூழலில், தவறாகப் புரிந்து கொள்ளவோ விளங்காமல் குழப்பம் அடையவோ வாய்ப்புகள் ஏற்படுகின்றன. எனவே, விரைந்து வளரும் கணிணியியலில் துறை வளர்ச்சிக்கேற்ற கலைச்சொல் பெருக்கமும் அமைய வேண்டும். இத்தகைய கலைச் சொல்பெருக்கத்திற்குத் தடையாக இருப்பது சொல்லைப் புரிந்து கொண்டு படைக்காமல், 'சொல்லுக்குச் சொல்' என்ற நேர்முறையில் ஆக்கப்படும் கலைச்சொற்களும் தமிழ்ச் சொற்களைக் கையாளாமல் ஒலிபெயர்ப்புச் சொற்களாக மூலச் சொற்களைக் கையாளலுமாகும். இவற்றை உணர்ந்து, புத்தம்புதுக் கலைச்சொற்களை நாளும் உருவாக்கவும், உருவாக்கப்பட்ட கலைச் சொற்களைப் பயன்படுத்தவும் நாம் முன்வர வேண்டும். கலைச் சொற்கள் சுருங்கியனவாகவும், அவற்றின் அடிப்படையில் மேலும் புதிய கலைச் சொற்களை ஆக்க வாயிலாகவும் அமைய வேண்டும்.

கணிணியியலில் அமையும் கலைச் சொற்களைப் பின்வருமாறு பகுக்கலாம்:

1. பெரும்பான்மையர் தமிழில் கையாளும் சொற்கள்: சான்றாக, பெரும்பான்மையர் 'கோப்பு' என்றே எழுதி வந்தாலும், சிறுபான்மையர் 'டேபைல்' என்றே குறிப்பிடுவது.
2. சிறுபான்மையர் தமிழில் கையாளும் சொற்கள்: சான்றாக 'இண்டர்நெட்' எனப் பெரும்பான்மையராலும், 'இணையம்' எனச் சிறுபான்மையராலும் கையாளப்படுவது.
3. ஆங்கிலத் தலைப்பெழுத்துச் சொற்களையே கையாளுதல். சான்று: **RAM, ROM**
4. அனைத்துத் தரப்பினரும் ஆங்கிலச் சொற்களையே கையாளுதல். **modem** – மோடம் எனல். சிலர் ஆங்கிலச்சொற்களையே – ஆங்கில வரிவடிவங்களைக் கொண்டே – தமிழ்க் கட்டுரையில் பயன்படுத்தல்.சான்று: "**Syntax error** என்பது எளிதான தவறு; **Semantic error** என்பது கடுமையான தவறாகும்." என ஆங்கிலச் சொற்களை அவ்வாறே கையாண்டுள்ளமை. (இவற்றை, முறையே 'அமைவுத்தவறு', 'பொருள் தவறு' எனக் குறிப்பிட்டிருக்கலாம்.)
5. ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையாகக் கையாளுதல். சில நேரங்களில் ஒருவரே வெவ்வேறு வகையாகக் கையாளும் நேர்வும் உள்ளது. சான்றாகக், 'கம்ப்யூட்டர்' என்பதற்குக் கணிப்பொறி, கணிணி, கணினி, கணணி, கணிப்பான், கணிப்பொறி இயந்திரம் என வெவ்வேறு வகையாகக் கையாளல். இவற்றைத் தலைப்பில் ஒரு வகையாகவும், உள்ளடக்கங்களில் வேறுவகையாகவும் கையாளுதல். அதேபோல், ஒத்த பொருளுடையதாய் வெவ்வேறு சொற்களைப் பயன்படுத்தல். சான்றாக, **home** என்பதற்கு, வீடு, முகப்பு, மனை, இல்லம், தலைவாயில் என்பன போன்று பல வகையாகக் கையாளுதல். நடைமுறைக்கு நல்ல சொற்கள் வந்துவிட்டபின்னும் கொச்சையாகக் கையாளுதல்.
6. சுருங்கிய கலைச்சொல்லாக இல்லாமல், விளக்கச் சொற்றொடராகக் கையாளுதல். எ.கா.: **debugging aids** - பிழை நீக்க உதவும் பொருள்கள் – பிழை நீக்குதவி என்று சொல்லலாம். **bootstrap input program** – கணணி உயிர்ப்பூட்(டு)டல், உள்ளீட்டு திட்ட

நிரல் - தொடக்கத் தரவு நிகழி என்று சொல்லலாம். இருப்பினும் (தமிழில் எழுதினால்தானே சுருக்கம், விரிவு என்றெல்லாம் சூழல் ஏற்படும்;) பொதுவாக ஆங்கிலச் சொற்களையே கையாளும் போக்கு காணப்படுவதால், இவற்றிற்கான வாய்ப்பு குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால், தமிழில் அமைந்தனவற்றுள் பல மேலும் எளிமையாகவும் சுருக்கமாகவும் அமைதலே நன்று.

7. பொருள்விளக்கமான கலைச்சொல்லைக் கையாளாமல், நேருக்குநேர் மொழி பெயர்த்துக் கையாளுதல். **mouse** என்றால் சுண்டெலி என்பது போன்றவை.
8. தவறான சொல்லாக்கத்தைக் கையாளுதல். எ.கா.: **barcode – சட்டக் குழூஉக்குறி; bar** என்றால் சட்டம் என **bar council** என்ற முறையில் எண்ணியிருந்தாலும், **frame** என்று பொருள் கொண்டிருந்தாலும் தவறுதான். (பட்டைக்குறி என்று சொல்லலாமே!)
9. ஒரு சொல்லே வெவ்வேறு பொருள்களில் கையாளப்படுதல். எ.கா.: அடையாளம் அல்லது சின்னம் என்றே **symbol, logo, icon** ஆகிய சொற்களைக் குறித்தல். தனித் தனிச் சொல்லாக முறையே குறியீடு, முத்திரை, குறியுரு எனலாம்.
10. பிற அறிவியல் துறைச் சொற்களைக் கையாளுதல். எடுத்துக்காட்டாக, எண்-மதிப்புகள் கணக்குத் துறையில் கையாளப்படுகின்றன. இங்கும் கையாளப்படுகின்றன. ஆனால், அங்கும் தமிழ் இல்லை; இங்கும் தமிழ் இல்லை. பிற அறிவியல் துறைகளில் தமிழ்க்கலைச்சொற்களைக் கையாண்டிருந்தால், அவற்றையே இத்துறையிலும் கையாளுவதே ஏற்ற முறையாகும்.

மேற்குறித்த ஒவ்வொரு வகைப்பாட்டிலும், கணிணிக் கலைச்சொற்களை ஆராய்தல் இன்றைய அடிப்படைத் தேவையாகும். எனினும் நாம், இங்கு நேர்பெயர்ப்புச் சொற்களையும் ஒலிபெயர்ப்புச் சொற்களையும் பற்றி மட்டும் பார்ப்போம்.

இவற்றுக்கு முன்னதாகச் சொல்லாக்க நெறிமுறைகள் குறித்துக் கருத்தில் கொள்ள வேண்டும். எந்த ஒரு சொல்லுக்கும் தனிப்பட்ட முறையில் பொருள் இல்லை. அச்சொல் பயன்படும் இடத்திற்கேற்பத்தான் அச்சொல்லுக்குப் பொருள் உண்டாகிறது. *சொல் என்பது பொருளைச் சுமந்து செல்லும் ஊர்திதான். குறிப்பிட்ட சூழலில் எந்த ஒரு பொருளை வெளிப்படுத்துகிறதோ அதுதான் அந்த இடத்தில் அந்தச் சொல்லின் பொருளாகிறது.* அந்தச்சொல்லே வேறு இடத்தில் வேறு பொருளை விளக்கும்பொழுது சொல்லின் பொருள் வேறாகின்றது. நீர், தான் இருக்கும் இடத்திற்கேற்ற வடிவைப் பெறுவதுபோன்று, சொல்லும் இடத்திற்கேற்ற உருவையும் வனப்பையும் பெறுகிறது எனலாம்.

எடுத்துக் காட்டாக soft ware, hard ware என்பவற்றை நேர்பொருளில் மொழி பெயர்த்து மென்பொருள் அல்லது மென்மி, வன்பொருள் அல்லது வன்மி என்று சொல்வது தவறாகும். பயன்பாட்டு அடிப்படையில் கணியம், கருவியம் எனக் குறிப்பிடுவதே முறையாகும். இவை போன்றே *சாப்டுகாப்பி* **(soft copy)** என்றும் *ஆர்டுகாப்பி* **(hard copy)** என்றும் சொல்லப்படுவன முறையே மென்படி என்றும் வன்படி என்றும் குறிக்கப்படுவதும் தவறாகும். *சாப்டுவேர்* என்பதைக் கணியம் என்றாலும் *சாப்டுகாப்பி* என்பதை நாம் கணிணியில் காட்சியாகக் காணும் படி என்ற பொருளில் காட்சிப்படி என்றும் அச்சுப்படியாக நாம் எடுக்கும் *ஆர்டுகாப்பி* என்பதை அச்சுப்படி அல்லது கைப்படி என்றும் சொல்லுவதே முறையாகும். தவறான தமிழ்ச் சொல்லாக்கங்கள் குறித்து எள்ளி நகையாடுவதோடு நிற்காமல், சரியான சொல்லாக்க முயற்சியில் ஈடுபட்டு அவற்றைப் படிப்போரிடையே பரப்ப வேண்டும்.

*தமிழ் மொழியில் - உருவாக்கப்படும் ‘தொடர் சொற்கள்’ உரிய பயன்பாட்டை இழந்து விடுகின்றன. ‘பயன்பாடு இல்லாத சொல் இருந்து பயன் என்ன? நாம் கலைச் சொற்களை உருவாக்குவதன் நோக்கம், அவை அயற் சொற்களை யகற்றி அல்லது*

*அயற்சொற்களுக்கு இடந்தராமல் நின்று நிலைத்துப் பொருள் தரவேண்டும் என்பதே!* எனவே சுருங்கிய எளிய சொற்களையே கையாளல் வேண்டும். நடைமுறையில் வழங்கப்படும் பழஞ்சொற்களையும் புனையப்படும் புதுச்சொற்களையும் பயன்படுத்தி உயிர்ப்பூட்ட வேண்டும். ஆகவே, *கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபடும் பொழுது, (மூலச்) சொல்லுக்கு நேரான (பெயர்ப்புச்) சொல்லை அமைக்காமல், (மூலப்)பொருளுக்கு ஏற்ற (பெயர்ப்புச்) சொல்லையே ஆக்க வேண்டும். சொல் செறிவாயும் செவ்விதாயும் இருத்தல் வேண்டும். பண்பாட்டுப் பின்னணியைக் கருத்தில் கொண்டு ஆக்கப்பட வேண்டும். 'குன்றக் கூறல்' முதலான நூற்குற்றங்கள் பத்தும் 'சுருங்கச் சொல்லல்' முதலான நூல் அழகுகள் பத்தும் சொல்லுக்கும் மிகப் பொருந்தும்.*

*"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை*
*வெல்லும் சொல் இன்மை யறிந்து."*

*எனும் திருக்குறளை நினைந்து தக்க சொல்லைத் தெரிவு செய்ய வேண்டும். அயற்சொல் கலப்பை அறவே நீக்க வேண்டும். உரிய சொல் கண்டறியும் இடைநேரத்தில் அயற்சொல்லைப் பயன்படுத்த வேண்டிய தவிர்க்க இயலா நேர்வுகளில் பெயர்ப்பு மொழியின் வரிவடிவிலேயே எழுத வேண்டும்.*

கணிணியியலில் தற்போது நடைமுறையில் உள்ள தவறான சொல்லாக்கங்களையும் (அடைப்பில் உள்ளன) உரிய பொருளில் எவ்வாறு குறிப்பிட வேண்டும் என்பனவற்றையும் பின்வருமாறு அளிக்கின்றேன். விரிவு அல்லது விளக்கம் வேண்டுவோர் முழுமையான கட்டுரையைப் படித்துப் பயனுற வேண்டுகிறேன். (மின்வரியில் தொடர்புகொண்டால் முழுக் கட்டுரை அளிக்கப்படும்) ஒலி பெயர்ப்புச் சொற்களையும் ஆங்கிலத் தலைப் பெழுத்துச் சொற்களையும் கையாளுவதைத் தவிர்க்க இவை துணை புரியும்.

**ஒலி பெயர்ப்புச் சொற்கள்**

Bit–(பிட்; துண்டு)> **ஓர்மி**

Byte– **எண்மி**

NIBBLE–நான்மம் > நான்மி

Bomb - (குண்டு)> **அழிப்பி**

Brush – (புருசு, தூரிகை)> **மின்னிகை**

Bug – (பூச்சி)> **பிழை**

**Debugging**–(பூச்சிநீக்கம்)> **பிழை நீக்கல்**

Cache–(மறைவு, விரைவு)> **இடைச்சேமம்**

Cell – (செல், சிற்றறை)> **அலககம்**

Chain–(செயின்,சங்கிலி)> **தொடர் வினை >தொடரி**

Chip–(செதுக்கல்,சில்லு)> **சிமிழ்**

Clock Pulses – (கடிகாரத் துடிப்புகள்)> **பதிவாரத் துடிப்புகள்**

CPU Handshaking - (சி.பி.யு கைகொடுத்தல்)> **மை.வ.அ.பரிமாற்றி**

Drill and practice – (ஓடிப் பழகு)> **பழகிப் பயில்**

Dumb-(ஊமை)>**சார் செயலி**

Dump-(திணி)>**சேம மாற்றம்**

Error message - (பிழைச் செய்தி)> **வழு குறிப்பி**

Face– ((முகம்)> **முகப்பு**

Folder–(மடக்கி)>**அடங்கல்**

Garbage–(குப்பை)>**தேவையிலி**

Gate (வாயில்)>**இடுவாய்**

Joy stick -(மகிழ் குச்சி)> **இயக்கப் பிடி**

Language-(மொழி)> **விளம்பி**

Lifeware– உயிர்ப்பொருள்)> **செயலியர்**

Motion capture – (நகர்வு/அசைவு, சிறைப்பிடிப்பு)> **அசைவு கவர்வு/அசைவுஈர்ப்பு**

Menu– (மெனு)> **நிரல்**

Noise–(இரைச்சல், சப்தம்)> **குறுக்கீடு**

Opensystems–(திறந்தவெளி முறைமைகள்)> **பொதுமை முறைமைகள்**

Prompt – (காட்டி / தூண்டி)> **குறிப்புதவி**

Raw data - (பச்சை விவரம்)> **மூல விவரம்**

Scroll – (அழிப்பான், திரை உருளல்)> **சுருணை**

Slave application – (எடுபிடி பிரயோகம், / அடிமை – ஆணைகேள்)> **சார் வினைப்பாடு**

Smart peripheral– (கெட்டிக்கார வெளிப்புறப் பிரிவு)> **திறன் புறக் கருவி**

Intelligent terminal – (கெட்டிக்கார முகப்பு)> **திறன் முகப்பு**

Tree– (மரம்)> **கிளைப்பி**

Forest – (காடு)> **கிளைப்பித் திரள்**

Virus – (வைரசு , நச்சுயிரி)> **சிதைப்பி**

## தலைப் பெழுத்துச் சொற்கள்

Baud – (போ(ஓ)ட் / பாடு (ஓர் அலகு) / பாட்)> **முடுகுமானம்**

Biquinary-(பிக்குனரி)>**ஈரைமம்**

Capstan – (கேப்சுடன்)> **சுழற்றி**

Cartridge – (கார்டிரிட்சு)> **பொதியுறை**

Diode – (டையோடு)> **ஒருமுகி**

Do-loop – (டூ லூப்)> **மாறுநிலைத் தொடரி**

Dongle – (டாங்கிள்)> **தவிரி**

ESC Key / Escape key – (எஸ்க் கீ)> **விடுவிசை**

Fetch – (பெட்ச்)> **கொணர்வு**

I/O Input / Output – (இன்புட்/அவுட்புட்)> **த/பெ; தரவு/பெறவு**

Paddle - (பாடில்)> **துடுப்பம்**

ABEND – (அபெண்ட்)> **அல்லியல் முடிவு; அ.மு.**

Abnormal termination - (திடீர் நிறுத்தம்)> **அல்லியல் நிறுத்தம்; அத்தம்**

ADONIS – (அடோனிசு)> **இ.த.மு.க.; இணைதகவு**

ADP – (ஏடிபி)> **த.வி.வ.; தன்வனைவு**

ALGOL – (அல்காரிதம்)> **தீ.வி./தீர்விளம்பி**

APL – (ஏபிஎல்)> **க.செ.வி./கணிவிளம்பி; கணிவி**

ASCII- (அசுகி)> **பரியீடு**

Basic Language – (பேசிக் மொழி)>**அறிமுறை விளம்பி**

BBC MICRO – (பிபிசி மைக்ரோ)> **பிரி.ஒலி.கணி**

BCD – (பிசிடி)> இருமக் குறியீட்டுப் பதின்மம்> **இகுமம்**

BCPL - (பிசிபிஎல்)> **வனைவி**

BIOS – (பயாசு)> அடிப்படைத் தரவு / பெறவு முறை **அ.த.பெ.மு.**

CAD – (கேட்)> **க.உ.வ./கணி வரை**

CAI – (கேய்)> **க.உ.அ./கணிமுறை**

CAM – (கேம்)> **க.உ.உ.; கணித்தி**

CBX - (சி.பி.எக்சு)> கணிக்கட்டுப்பாட்டுக் கிளை நிலையம்; **கணிக்கிளையம்**

C-DAC - (சி–டேக்)> **கணிமேலம்**

CIM – (சி.ஐ.எம்.)> கணிணித் தரவு நுண்படம்;**கதநு**.

COBOL – (கோபால்)> பொது வணிகமுக விளம்பி; **வணிவி**

CPL - (சிபிஎல்)> தொகுப்பு நிகழி விளம்பி; **தொநிவி**

CPL - (சிபிஎல்)> வரி ஒன்றிற்கு எழுத்துரு எத்தனை; **வ.எ.எ.**

CPM – (சிபிஎம்)> கட்டுப்பாட்டு நிகழி - நுண்வனைமம்; **கநிநுவனை.**

CPU - (சிபியு) > மைய வனைம அலகு; **மைவனை**

DBMS– (டிபிஎம்எசு) > விவரணைத் தள மேலாண் முறை; **விவமேல்**

DCE – (டிசிஇ) > விவரணைத் தொகுப்புக் கருவி; **விவமேல்**
EBCDIC - (ஈபிசிடிஐசி) > நீட்சி ஓர்மிக் குறியீட்டு பதின்மப் பரிமாற்றக் குறியீடு; **நீட்டிடு**
EDP - (ஈடிபி) > மின்னணு விவரணை வனைமம்; **மிவிவனை**
ENIAC – (ஈனியாக்) > மின்னணு எண் ஒருங்கிக் கணக்கி; **ஒருக்கி**
EOF – (இஒஎ.ஃப்) > கோப்பு முடிவு; **கோ.மு**.
EOM – (இஓஎம்) > செய்தி முடிவு; **செ.மு**.
EOT–இஓடி) > மாற்றீட்டு முடிவு; **மா.மு**.
EPROM–(ஈப்ராம்); அழிவகுபடிஏற்றம்; **அழிஏற்று (அழியேற்று)**
Fortan - **(**போர்ட்ரான்)> **விதி மாற்றம்;**
Forth–(போர்த்து)>**விரைவு விளம்பி >** **விரைவி**

HLL–(எச்எல்எல்) உயர்நிலை விளம்பி; **உ.நி.வி**

IC–(ஐசி)> ஒருங்கிணைந்த மின் சுற்று ; **ஒருமின்**
IBM-PC – (ஐபிஎம் பிசி)>பன்னாட்டு வணிகப் பொறியத் தனியர் கணிணி; **பவபொ தகணி**
INFLIBENT– (இன்பிலிபெண்ட்)> கணிணித் தகவல் வலையமைப்பு. **நூற் தக வலை**
IOCS - (ஐஓசிஎசு)>தரவு பெறவு கட்டுப்பாட்டு முறைமை ; **த.பெ.க.மு**
ISD - (ஐஎசுடி)> **அயல் நேரி**
ISO - (ஐஎசுஓ)> தரப்படுத்துப் பன்னாட்டு அமைப்பு; **த.ப.அ**.
LISP–லிஸ்ப்)>அல்லெண் விவரவனைவு; **விவனை**
Memory - (நினைவு, நினைவகம்)>**ஏற்றம்,**
Modem – (மோடம்)> **தருவி**
MPU– (எம்.பி.யு)> **நுண் வனைம அலகு>நு.வ.அ**.
On-line- (ஆன்லைன்)> **இணைநிலை**

Off-line– (ஆப்லைன்)> **அணைநிலை**
Pixel–(பிக்செல்)> **படக்கூறு**
PL/1-(பி.எல்.1)>**நிகழி விளம்பி-1**
Program – (அறிவுறுத்தல்) > **நிகழி**
RPG - (ஆர்.பி.ஜி)> **அறிக்கை நிகழி உருவாக்க விளம்பி; அறிநிவி**
SBC– (எஸ்பிசி) > தனி அட்டைக் கணிப்பொறி; **த.அ.க.**
SEA-ME-WE: (). தென்கிழக்கு ஆசிய, மத்தியக் கிழக்கு மேற்கு ஐரோப்பா; **தெ.கி.ஆ– ம.கி.மே.ஐ.**
WORM – (வோர்ம்)ஒருமுறை எழுது பன்முறை படி; **ஒஎபப; எழுபடி**
WYSIWYG – (விசுவிக்)> காண்பதே கிடைக்கும்; **கா.கி.**

**மைக்ரோ, மில்லி, நானோ, பீக்கோ, கிலோ, மெகா, கிகா முதலான அளவைகளெல்லாம் கணிணியியலுக்கு மட்டுமே உரியன அல்ல. கணக்கறிவியலில் இருந்து பயன்படுத்தப்படும் பொதுவான சொற்களே. இவையும் எல்லா இடங்களிலும் தமிழிலேயே குறிக்கப்பட வேண்டும். வேறு வேலை இல்லையா? உலகளாவிய கணக்குச் சொற்களைப் பயன்படுத்த வேண்டியதுதானே! என்பர் சிலர். உண்மையில் பழந்தமிழ்நாட்டிலேயே வேறு எவ்வினத்திலும் இல்லாத அளவு மிகமிகக் கூடுதல் மதிப்பிலும் (அனந்தம் 10 இன் 189 அடுக்கு) மிகமிகக் குறைந்த மதிப்பிலும்(தேர்த்துகள் 1 / 2323824530227200000000) எண்களைப் பயன்படுத்தி வந்தது தமிழினமே! இன்றும் பல மொழியினர் தத்தம் மொழியிலேயே எண்களைக் குறிப்பிட்டு வருகின்றனர்.**

அவ்வாறிருக்க நாம் நாம் பழஞ் செல்வத்தைக் குப்பையில் போடாமல் பேணிக் காத்துப் பயன்படுத்துவதே சரியானதாகும். எனவே, கணிணியில் குறிப்பிடப்படும் எண்மதிப்புகளையும் பின்வருமாறு தமிழிலேயே குறிப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| 4 இருமம் (4 Bits) | - | 1 நான்மம் (1 Nibble) |
| 8 இருமம் (8 Bits) | - | 1 எண்மம் (1 Byte) |
| 1024 எண்மம் (1024 Bytes) | - | 1 அயிரை எண்மம் (1 Kilo Byte) |
| 1024 அயிரை எண்மம் (1024 K.B) | - | 1 மா அயிரை எண்மம் (1 Mega Byte) |
| 1024 மா அயிரை எண்மம் (1024 MB) | - | 1 பேரயிரை எண்மம் (1 Giga Byte) |
| 1024 பேரயிரை எண்மம் (1024 GB) | - | 1 மாப்பேரயிரை எண்மம் (1 Tera Byte) |
| 1024 மாப்பேரயிரை எண்மம் (1024 TB) | - | 1சீரயிரை எண்மம்(1 Petta Byte) |
| 1024 சீரயிரை எண்மம் (1024 PB) | - | 1 மாச்சீரயிரை எண்மம்(1Exa Byte) |
| 1024 மாச்சீரயிரை எண்மம் (1024 EB) | - | 1செவ்வயிரை எண்மம் (1 Zeetta Byte) |
| 1024 செவ்வயிரை எண்மம் (1024 ZB) | - | 1 மாச் செவ்வயிரை எண்மம் (1Yotta Byte) |

கீழ் வாய் எண்களையும் பழந்தமிழ் முறையில் பின்வருமாறு குறிக்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| deci- | $10^{-1}$ | கீழ்ப் பதின் | nano- | $10^{-9}$ | கீழ்ச் சிற்றயிரை |
| centi- | $10^{-2}$ | கீழ் நூறன் | pico- | $10^{-12}$ | கீழ் மீச் சிற்றயிரை |
| milli- | $10^{-3}$ | கீழ் அயிரை | femto- | $10^{-15}$ | கீழ்ச் சீரயிரை |
| micro- | $10^{-6}$ | கீழ் மீ அயிரை | atto- | $10^{-18}$ | கீழ் மீச் சீரயிரை |

தமிழ்ப்படைப்புகளில் அயற் சொற்களும் கிரந்த எழுத்து முதலான அயல் எழுத்துகளும் பயன்படுத்தக்கூடா. அனைத்துத் துறைகளிலும் தமிழில் எண்ணுவதற்கு வழி வகுக்கும் வகையில் எளிய இனிய செவ்விய தமிழில் எழுத வேண்டும். அதற்கு கணிணியமைப்புகளும் அறிவியல் துறை யமைப்புகளும் உதவ முன்வரவேண்டும்.

ஆதலின் கலையியல் ஆர்வலர்கள், தமிழ்ப்புலமையர், சொல்லாக்கநெறி ஆட்சியர் ஆகியோா் ஒன்றிணைந்து புத்தம்புதுக் கலைச் சொற்களை உடனே உருவாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். பழந்தமிழ்ச் சொல் வளத்தை வீணாக்காமல் இம்முயற்சிக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கணிணியியல் கட்டுரையாளர்கள், நூலாசிரியர்கள், இதழாளர்கள், உரையாளர்கள் ஆகியோருக்குச் சொல்லாக்கப் பயிற்சிகள் அளிக்க வேண்டும். தமிழ்க்கலைச் சொற்களைப் பயன்படுத்தும் நூல்களை மட்டுமே பாட நூல்களாக வைக்க வேண்டும்; கலப்பு நடையைக் கைவிட்டு நல்ல தமிழில் எழுதப்படும் நூல்களுக்கு மட்டுமே பரிசுகள் வழங்க வேண்டும். ‘இத்தகைய விதி செய்வோம்! அதை எந்த நாளும் காப்போம்!’ என்னும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். முயன்றால் முடியாதது என எதுவும் உண்டோ? எனவே, கணிணிச் செல்வத்தைத் தங்குதடையின்றித் தமிழுலகிற்கு அளிப்போம்! சொற்கள் புதியன புனைவோம்! நூல்கள் புதியன படைப்போம்! அன்னைத் தமிழ் நோக்கி நம் துறையறிவுப் பயணம் இருக்க வேண்டும். இந்த வகையில் நாளும் வளர்ந்துவரும் கணிணியியலிலும் நற்றமிழ் முழுமையாய் ஆட்சி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தவே இக்கட்டுரை. தவறான சொல்லாக்கம் என்பது தமிழின் பிழையன்று; தமிழனின் பிழையே என்பதை உணர்த்தித் திருத்தவே இக்கட்டுரை.

அறிவியல் செல்வத்தைச் சேர்ப்போம்! தமிழைச் செழிப்பாக்குவோம்! நாமும் செழிப்பாவோம்! வாழ்க தமிழாக! வளர்க நலமாக!